1982 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பேரவை அலுவல்

திரு. ரா. உமாநாத்; பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் கூறியபடி, இந்த செஷனில் சில ஐடம்களை மட்டும் எடுத்து முடிப்பது என்பது அரசாங்கத்தின் தரப்பிலும், எதிர்க் கட்சிகள் தரப்பிலும் ஒரு அன்டர்ஸ்டான்டிங்கில் முடிவு செய்யப்பட்டது. அந்த அன்டர்ஸ்டான்டிங்கின் படி பாக்கிப் பிரச்னைகளைப் பற்றி முடிவெடுப்பதற்கு இன்னொரு செஷன், அதாவது பெரியகுளம் இடைத் தேர்தலுக்குப் பிறகு என்று எல்லோரும் சேர்ந்து ஒத்துக்கொண்டு, முடிவெடுத்ததன் அடிப்படையில்தான் அது பைனலைஸ் செய்யப்பட்டது. வருகிற அக்டோபரிலோ அல்லது நவம்பரிலோ பேரவையின் கூட்டத்தை வைக்கலாம் என்ற அடிப்படையில் ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிறது. நவம்பர் மாதம் தாங்கள் சுற்றுப்பயணத்திற்கு போகிறபடியால், அவையை ஒத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை என்று, நீங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நிச்சயமாக நவம்பரில் வைப்பது என்ற ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிறது. எல்லோருக்கும் நான் அதைத் தெரியப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் சொன்னதை, இங்கே அவர்கள் ரெகார்ட் செய்கிறார்கள். அவ்வளவுதான்.

(ஆ) விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழகத்தில் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். தங்களுக்கு ஊதிய உயர்வு ஒருங்கிணைந்த சட்டத்தின் மூலமாக வேண்டுமென்று கேட்டார்கள். அந்தச் சட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டபோது, அந்தச் சட்டம் தேவையில்லை என்று நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதன் விளைவாக இந்த விவசாயத் தொழிலாளர்களிடையே இன்றைக்குக் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு.) மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சராக இருந்தாலும் அல்லது விவசாயத் துறை அமைச்சராக இருந்தாலும், விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்கு ஒருங்கிணைந்த சட்டத்தின் மூலம்.. .. ..

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS